விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: [illegible] மார்கழி 23 [illegible] ஆகிர் பிறை 20 இதழ்: 257
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-1-1991

சர்வதேச நிதி நிறுவனம்

## யுத்தத்தை நிறுத்துமாறு அரசிடம் வலியுறுத்து!

(லண்டன்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு சர்வதேச நிதி வழங்கும் நிறுவனம் இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றன.

இந்த யுத்தம் தொடருமாயின் இலங்கைக்கு மேற்படி நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகள் நிறுத்தப்படும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

(3ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு 71 கோடி ரூபா மேலதிக செலவு

(கொழும்பு)

எண்பத்தொன்பதாம் ஆண்டு அமைச்சுக்களின் தவறான வழிகாட்டலாலும், திட்டமிடுதலில் தவறுகள்

(4-ம் பக்கம் பார்க்க)

★ போர் நிறுத்தத்திற்கு

# ஒத்துழைப்பு இல்லாவிட்டால் மீண்டும் போர் ஆரம்பிப்போம்!

## கிட்டு எச்சரிக்கை

(லண்டன்)

"போர் நிறுத்தத்திற்கு அரசுத் தரப்பில் தொடர்ந்தும் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லையானால் விடுதலைப் புலிகள் மீண்டும் போர் தொடங்கவேண்டிவரும்" என்று விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரச படைகளின் யுத்த நிறுத்த மீறல் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே திரு. கிட்டு இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

"இந்தப் போர் நிறுத்தம் நீடிக்கவேண்டுமானால் அரசு மட்டத்தில் ஒத்துழைப்பு இருக்கவேண்டும்:

"அமைதி வேண்டியே போர்நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தோம். இதற்கு அரசு ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் மீண்டும் போர் தொடங்குவோம்', என்றும் அவர் கூறினார், (ரி)

## "போர் ஓய்வை தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம்"

(யாழ்ப்பாணம்)

"வடக்கு-கிழக்குப்பகுதிகளில் சிங்கள இராணுவம் போர் ஓய்வை மீறி வருகின்ற போதிலும், யுத்தநிறுத்தத்தை நாம் தொடர்ந்து முறையாகக் கடைப்பிடித்தே வருகிறோம்" என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்த அறிவிப்புக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற அரசபடைகளின் யுத்த நிறுத்த மீறல் விபரங்கள்.

மட்டக்களப்பிலுள்ள வெல்லாவெளி காக்காச்சிவெட்டைப் பாடசாலை அகதி முகாமிலிருந்த மூன்று தமிழ் பெண்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கடந்த 4-ம் திகதி பாலியல் வன்முறைக்

[2-ம் பக்கம் பார்க்க]

## வடக்கு-கிழக்கு இணைப்பை தடுக்க முயற்சி!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் பயன்படுத்தி வடக்கு கிழக்கு மாகாண இணைப்பைத் தடுப்பதற்கான முயற்சிகளில் தென்னிலங்கையிலுள்ள சில முஸ்லிம் தலைவர்களும், அரசியல் அமைப்புகளும் ஈடுபட்டு வருகின்றன

இந்த இரு மாகாணங்களும் இணைந்து கொள்ளக்கூடாது என்ற பிரசாரத்தை சபாநாயகர் எம். எச். மொகமட் உட்பட பல அமைப்புகள் ஆரம்பித்துள்ளன.

கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஒருமித்து நின்றால் வடக்கு கிழக்கு

(3ம் பக்கம் பார்க்க)

### 100 லொறிகள் உணவுடன் யாழ்ப்பாணம் வந்துள்ளன

(பூநகரி)

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நூற்றுக்குமதிகமான லொறிகள் நேற்றுவரை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

(4-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. (உயர்தர) பரீட்சை ஏப்ரலில் நடைபெறும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறாத கல்விப் பொதுத் தராதர உயர்தர/ சாதாரணதரப் பரீட்சைகளை இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் நடாத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

(3-ம் பக்கம் பார்க்க)

## வாழ்க்கையில் வரலாறாக விளங்கும் கப்டன் அமலன்!

(யாழ்ப்பாணம்)

கப்டன் அமலன் வாழ்க்கையில் வரலாறு ஆகவும் மரணத்தில் பாடப்புத்தகமாகவும் பல்கலைக்கழகமாகவும் விளங்குகின்றார் என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. இராஜன் தெரிவித்தார்

நேற்று கோப்பாயில் நடைபெற்ற கப்டன் அமலனின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திரு. ராஜன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு அரசியல் பொறுப்பாளர் திரு. சங்கீதன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம்

(4-ம் பக்கம் பார்க்க)

## பத்து லட்சம் பேர் அகதிகளாக வாழ்கிறார்கள்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பத்து லட்சம் மக்கள் தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக வாழ்கிறார்கள் என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது!

[4-ம் பக்கம் பார்க்க]

"தமிழருக்கு அதிகாரம் வழங்குவதற்கு

## இலங்கையை இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும்"

(சென்னை)

ஈழத் தமிழருக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்க இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டுமென தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. இரா. அன்பரசு

(3-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## நாடக நூல்கள்

O/L தமிழ்பாட திட்டத்தில் நாடகமும் உள்ளது. அதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய இரண்டு நாடக நூல்கள்: அராலியூர் ந சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம் பிள்ளை 30/-, 19 வானொலி நாடகங்கள், நாடகங்கள் பற்றிய விளக்கங்கள் விமர்சனங்களும் கொண்டவை.

(சி 4238)

## பயிற்சி

றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், றீவைண்டிங், வயறிங் Computer Programming, Spoken English பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பம் 10-1-91, Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எ-971)

## ஜோதிடம்

புத்தாண்டுப் பலன்களும், சனி மாற்றமும் விலை ரூ. 4-50 எங்கும் கிடைக்கும். நூலாசிரியர்;- Prof. சத்தியதாஸன் MECH.E,LBC.E ஏஜென்ஸி, S R. புஸ்பநாதன் ஸ்ரோர்ஸ், சங்கானை.

(சி-4241)

## ஆங்கிலவகுப்புகள்

கொழும்பு, வத்தளை, குருநாகல், மட்டுநகர் பிரபல ஆசிரியர் மேரி ஆனந்தன் மூன்று பாடநெறிகளை உடன் ஆரம்பிக்கிறார். By - pass to Mastery of English Part II, Spoken English with Lingual Training, G. C. E. O/L & A/L வினாவிடை. மாணவர் தொடர்பு: 10ம் திகதிக்குமுன் ஞானபண்டித வைத்தியசாலை குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

(சி-4242)

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றேட், கோண்டாவில்.

**கல்வியாண்டு - 1991**

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையான

**வகுப்புக்கள்05-01-91ல் ஆரம்பமாகிவிட்டன**

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இராசெல்வவடிவேல், |
| | — | திருமதி உமாதேவி |
| கணிதம் | — | திரு. இந்திரன், |
| | | திரு. லோகேஸ்வரன், |
| | | திரு. வாமதேவன் |
| சமூகக்கல்வி | — | திரு. வேலா, செல்வி சுந்தரி, |
| | — | செல்வி நிர்மலா |
| தமிழ் | — | திரு. பண்டிதர், |
| | | திரு சுந்தரலிங்கம் |
| ஆங்கிலம் | — | திரு. மகாலிங்கம், |
| | — | திரு. ரமேஸ் |
| வர்த்தகம் | — | திரு. நவம் |

[ஏ-962]

# 5-வது பிறந்தநாள் வாழ்த்து

## ★ செல்வி சிந்திஜா ★

பவானந்தராஜா ஜெயந்தி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி செல்வி சிந்திஜா [07-01-1991] இன்று ஐந்தாவது பிறந்தநாளை சரசாலையில் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். அவரை அப்பா (ஜேர்மனி) அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரிய அப்பப்பா, பெரிய அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, கண்ணுச் சித்தப்பா (பிரான்ஸ்) ஆனந்து சித்தப்பா, விஜயா, ராணி, அத்தைமார், ஜேர்மனியிலிருக்கும் சீலன் மாமா, சிறி சித்தப்பா, மதி அன்ரா, ஸ்ரீ அன்ரா, நிலோ, அனுஇங்கா, சின்ன அம்மப்பா, சின்ன அம்மம்மா, பிரபா, கருணு அங்கிள், அத்தைமார், மச்சிமார், பூட்டி மற்றும் உற்றார் உறவினர், நண்பர், நண்பிமார் அனைவரும் நுணுவில் பிள்ளையார் அருள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

சி. வைத்திலிங்கம் (பேரன்)

மீசாலை தெற்கு,
மீசாலை.

(சி 4239)

## போர் ஓய்வை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குள்ளாக்கப்பட்டார்கள்.

மண்டூர் பகுதியில் கடந்த 2ம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு இருதயபுரத்தில் நேற்று முன்தினம் ரோந்து வந்த படையினரால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு டச்பார் வீதியைச் சேர்ந்த புலிகள் இயக்க ஆதரவாளர் தேவா என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

வெல்லாவெளியைச் சேர்ந்த பாலையடிவெட்டையில் கடந்த 4ம் திகதி ரோந்துவந்த இராணுவத்தினர் வீதியில் எதிர்ப்பட்ட ஏழு பொதுமக்களைத் தாக்கியுள்ளார்கள்.

இதே பகுதியிலுள்ள கனகலிங்கம் துரைராசா என்பவரது வீடும் இராணுவத்தால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளதுடன் இருபெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர்.

நான்கு வீடுகள் இப்பகுதியில் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டது. கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் இராணுவமுகாமிற்கு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன.

இதேபோன்று பல வீடுகள், கடைகள், மில் உட்பட தமிழர்களின் சொத்துக்கள் இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனையில் சாப்பாட்டுச்சாமான்களை வாங்கிக் கொண்டிருந்த பொதுமக்களை சோதனையிட்ட இராணுவத்தினர் அவர்கள் வைத்திருந்த பொருள்களை பறித்தெடுத்துள்ளனர். (வி)

# இராசிபலன்

**07-01-1991**

**திங்கட்கிழமை**

ஸப்தமி காலை 11-48 வரை, அத்தம் இரவு 12. 19 வரை சித்தயோகம் இராகுகாலம் காலை 8-00 முதல் 9. 28 வரை நல்லநேரம் மாலை 3.54-4.24 வரை.

மேடம்: காரிய வெற்றி, லாபசெயல், குடும்ப நன்மை, புதிய முயற்சி, பயணம்.

இடபம்:- வேண்டாத பிரச்சனை, கடன்சுமை, தொழில் பாதிப்பு, அலைச்சல் மிகுதி, யோசனை மிகுதி,

மிதுனம்:- பயனற்றசெயல் குடும்பத்தில் பகை, அந்நிய வாசம் காரியத்தடை அகால போஜனம்.

கடகம்:- தொழில் லாபம், இனசனவருகை, வீட்டில் சந்தோஷம், எதிர்பாராத உதவி.

சிங்கம்;- விவேகமற்ற செயல் குழப்பமடைதல், தொழில் பிணக்கு, கடித தொல்லை, பகை.

கன்னி;- காரியபலிதம், அதிகாரிகள் பாராட்டு, உல்லாசபயணம் நண்பர் உதவி, புகழ்.

துலாம்:- மனக்குறை, அவசரமுடிவு, சகோதரி கவலை, பணக்கஸ்டம், குடும்ப கஷ்டம்,

விருச்சிகம்:- தொழில் முதலீடு, அந்நியர் உதவி, பொதுத்துறை ஈடுபாடு, கருத்துமோதல்

தனுசு:- தொழில் பிணக்கு, அந்நிய தலையீடு, நோய் தணியும் குடும்ப நன்மை, லாபம்,

மகரம்;- அடுத்தவர் தொல்லை, வீண்வம்பு, குடும்ப பிரிவு, மாமனுல் உதவி, அகாலபோஜனம்.

கும்பம்:- திடீர் மனவிதாயம், உடல் நிலை பாதிப்பு குடும்பபிணக்கு, தொழில் நஸ்டம், அலைச்சல்.

மீனம்:- தொழில் முயற்சி வேலைப்பழு அதிகாரமேன்மை அதிக யோசனை, கடித உறவு, புகழ்.

'ஜோஸ்யர்'

# 45 ம் நாள் நினைவஞ்சலி

# அந்தியேட்டி அழைப்பு



## சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

(சிங்கம் இன்டஸ்றீஸ் பங்காளர்)

[பாலாவோடை - காரைநகர்]

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04-08-1958 | 24-11-1990 |

ஓ.. எங்கள் செல்வரத்தினமே!!
இன்ப ரத்தினமே!!
உன் நினைவலையால்
எங்கள் கனவுகளில் கூட
கண்ணீர் வடிக்கிறதே
இளமையான உன் வாழ்வு
கதையாகி கனவாகி
நெஞ்சில் உறங்கும் விடுகதையானயே!
நினைவுக்கோயிலில் நித்தம்
எரியும் ஜோதியானுயே!!
உன்பிரிவால் வாடுகிறோம்!!

அன்புடையீர்!

வவுனியா சிங்கள பேரினவாத கொடுமையால் அகால மரணமடைந்த சங்கரப்பிள்ளை செல்வரத்தினத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று காலை வில்லூன்றியிலும், சபிண்டீகரண நிகழ்வு இன்று [07-01-1991] திங்கட்கிழமை கல்வியங்காட்டிலுள்ள அன்னரது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள், வர்த்தகர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திக்கான நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்வண்ணம்,
குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள், ஊழியர்கள்.

கல்வியங்காடு.

(சி 974]

## இன்னும் ஒரு பிடியிருக்கு

ஈழத்தமிழர்களுக்கு நடக்கக்கூடாத அத்தனை கொடுமைகள் நடப்பது தெரிந்தும், வாய்மூடி மௌனியாக இருந்துவந்த இந்தியாவுக்கு திடீரென ஞானோதயம் பிறந்துவிட்டது போல் உள்ளது.

இங்கு எது நடந்தாலும் எமக்கென்னஎன்று எதுவித தலையீடுமின்றி 'இழுத்தடிப்பு' செய்துவந்த பாரதம் இல்லை! இல்லை!! இலங்கைப் பிரச்சனையில் இன்னும் எனக்கு பிடியிருக்கு'' என்ற தோரணையில் ஈழத்தமிழ் அகதிகள் குறித்து பிரதமர் திரு. சந்திரசேகர் மிகவும் ஆணித்தரமான கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் ஒன்றே கால் லட்சம் அகதிகளை இலங்கையில் வைத்து பராமரிப்பதாக இலங்கைப் பிரதமர் விடுத்திருந்த கோரிக்கையை இந்தியப்பிரதமர் நிராகரித்துள்ளதுடன் நிரந்தர அமைதி ஏற்பட்ட பின்னரே ஈழத்தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்புவது பற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

எமது பிரச்சனையை மையமாக வைத்து, எம் மீது பாரதத்துக்கு இவ்வளவு அக்கறையும், அபிமானமும் இலங்கை அரசுமீது ஓரளவு ஆத்திரமும் ஏற்பட்டுள்ளதன் மர்மம் எதுவென்று புரிவது சிரமம்தான்!

கடந்த ஆறுமாதங்களாக இலங்காபுரி-குறிப்பாக 'ஈழபுரி' தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த போது 'நீரோ' மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தது போல, இந்திய வானொலிகளும், தொலைக்காட்சியும் செய்த இருட்டடிப்புச் செய்திச்சேவையையும் தமிழகத்தின் தப்புதாளத்தையும் மறப்பதற்கில்லை.

ஈழத்தமிழர் குறித்து இந்தியப் பிரதமரின் இன்றைய ஞானோதயக் கருத்துக்கள் வெளிவந்துள்ள சூழ்நிலையில், நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த வெளியுறவு அமைச்சர் திரு. வி. சுக்லாவின் இலங்கை விஜயமும் இம்மாதம் 29-ம் திகதி என உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவரது விஜயத்துடன் இந்தியா எமது பிரச்சனையை எந்தக்கோணத்தில் வைத்து அணுகவுள்ளது என்ற உண்மை தெரிந்துவிடும்! புரிந்துவிடும்! பொறுத்திருந்து பார்ப்போம்!

— மயூரன்

# தோட்டங்களில் மரக்கறி வகைகள் இரவு நேரத்தில் திட்டமிட்டு திருட்டு!

## விடுதலை புலிகளிடம் விவசாயிகள் புகார்

(அச்சுவேலி)

அச்சுவேலி கிழக்குப் பகுதியிலுள்ள தோட்டங்களில் மரக்கறிவகைகள் திட்டமிட்ட முறையில் திருடிச் செல்லப்படுவதால் பயிர்ச் செய்கை மேற்கொண்ட விவசாயிகள் பலன் பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது

அச்சுவேலி கிழக்குப் பகுதியில் உள்ள பன்னுரை, நாச்சிமார் கோவில் இறதாவில் ஆகிய இடங்களில் செய்கை மேற்கொள்ளப்பட்ட பாவல், புடோல், பூசணி, மிளகாய் ஆகிய பயிர் தோட்டங்களில் இருந்து வாரந்தோறும் இரவு வேளைகளில் மரக்கறி வகை திருடப்படுகின்றது.

பயன்பாட்டிற்கு தயாராக இருக்கும் மரக்கறிகளை திருடிச் செல்லும் அதேநேரம் வளர்ச்சி அடையாத பிஞ்சுகள் பூக்களையும் சேதப்படுத்தி செல்வதாக விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்

மரக்கறிவகை திட்டமிட்டு திருடிச் செல்லப்படுவது பற்றி அந்தப் பகுதி விவசாயிகள் அச்சுவேலி விடுதலைப் புலிகள் பொறுப்பாளரிடம் புகார் செய்துள்ளனர். (74)

### க. பொ. த.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் தோற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான வினாக்களை தேர்வுசெய்வதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எஸ்)

## உப்புக்கூட்டுத்தாபன வட பிராந்திய காரியாலயம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய உப்புக்கூட்டுத்தாபன வடபிராந்தியக் காரியாலயம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பனை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் செயற்பட்டு வருகின்றது.

உபகாரியாலயம் பரந்தன், முல்லைத்தீவு வீதி, முரசுமோட்டையில் தேசிய அபிவிருத்தி சபை செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (க)

## "ஆயிரம்பிறை கண்டு வாழி"

அருள்நெறி அப்பர் வாதவூர ரென்போரின்
அருள்நெறி பற்றி நிற்போய்
மருள்நெறி நீங்கி அருள்நெறி பரவிட
மாண்புடன் உரை செய்வோய்
பொருள் மிகைபட தேடி நின்று
புண்ணியச் செயல்கள் புரிவோய்
அருங்குண நற்தங்கம்மாவே
ஆயிரம்பிறை கண்டு வாழி

நற்தமிழர் நற்பெருமைகள் பலவும்
நாடெங்கும் உரைத்து நிற்போய்
செந்தமிழ் பொலிந்து இலங்கிட
சிறப்புடன் உரைசெய்வோய்
நிந்தைசொல்வோர்க் கஞ்சாமல்
நிமிர்ந்துநின்று பணிசெய்வோய்
சிந்தைக்கினிய நற்தங்கம்மாவே
சீருடன் வாழி நீடு.

-சி. சபாநாதன்
சங்கரத்தை

[இன்று திங்கள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 66வது பிறந்த நாளாகும்]

## மண்ணெண்ணை விலை வீழ்ச்சி:
# பயிர்செய்கையில் விவசாயிகள் அக்கறை

(அச்சுவேலி)

மண்ணெண்ணை விலை குறைாத்தொடங்கி இருப்பது விவசாயிகளை பயிர்ச்செய்கைநடவடிக்கையில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்துள்ளது.

கடந்த சில வாரங்களாக மண்ணெண்ணை மிக அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டதால் விவசாயிகள் பயிர் செய்கை நடவடிக்கையில் ஈடுபடுவதில் ஆர்வம் கொள்ளாமல் இருந்து வந்தனர்.

தற்பொழுது மண்ணெண்ணை விலைசரியத் தொடங்கியதால் மிளகாய், வெங்காயம்மற்றும் பயிர்ச் செய்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

### வெங்காய செய்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் ஆகிய பகுதிகளில் விவசாயிகளினால் தைப்போக வெங்காயச் செய்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. [72]

### சர்வதேச

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கையில் அமைதி நிலவுவதற்குச் சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள் கடந்த பலநாட்களாகப் பின்னணியில் இருந்து இயங்கிவருவதாக ஏஜென்ஸிச செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி)

### உடுபிடவை சேகரிப்பு

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு சிற்றூரவையினர் அவதியுறும் தென் தமிழீழ மக்களின்துயர் துடைக்கும் பொருட்டு உடுபிடவை, பாத்திரங்கள்பணம் முதலியன சேகரித்து வருகின்றனர். (135)

## சைவசிறுவர் நிதிக்காக 30ம் தேதி கொடித்தினம்

(கொழும்புத்துறை)

யாழ். திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல நிதிக்காகப் பலாலி ஆசிரிய கலாசாலை இந்து மாமன்றம் இம்மாதம் 30-ம்திகதி யாழ் குடாநாடு, கிளிநொச்சி உட்பட்ட பிரதேசத்தில் ''கொடித் தினம்'' நடாத்தத் தீர்மானித்துள்ளது.

யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கத்தின்வேண்டுகோளின் படி பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரியர்கள் இம்முயற்சியில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

### வடக்கு-கிழக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணங்கள் நிரந்தரமாக இணைவதைத்தடுக்க முடியும் எனவும் கருத்து தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை சர்வஜனவாக்கெடுப்பும் மேலும் 8 மாதங்களுக்குப் பின்போடப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது. (ரி)

## ஈழம்பிறக்குது காலம் பிறக்குது

ஈழம் பிறக்குது காலம் பிறக்குது எங்களின்
அச்சமிறக்குது
வேழம்போலவொரு வீரம்பிறக்குது விந்தைகள்
இங்கு நடக்குது
ஆழமறியாது காலைவிட வந்தவெதிரிக்கு வாழ்வு
வெறுக்குது
தாளம்போட்ட எங்கள் சந்ததிபோனது
தரணிபோற்ற எம்தலை நிமிருது

கல்வியழியுது, கனிமறையுது கல்மனக் கூட்டம்
சிரிக்குது
எள்ளி நகைத்திட எம்மவர் தன்னிலிங்கொரு
கூட்டமிருக்குது
பள்ளிப் படிப்புகள் பாளாகிப்போகுது பச்சைத்
தோட்டம் பாதியில் நிற்குது
சொல்ல முடியா துன்ப அலைதனை அள்ளியிறைப்
பதாரிடமோ!

- மணிபாரதி

### பதிவாளர் வேண்டுகோள்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட இறப்பு, பிறப்பு 1991ஆம் ஆண்டு பதிவுக்குக் கொடுக்கப்பட்ட பதிவுகளைக் காலதாமதமின்றி யாழ்ப்பாணம் புங்கங்குளத்தில் அமைந்துள்ள பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் உடன் நேரில் சென்று பெற்றுக் கொள்ளும்படி வைத்தியப் பதிவாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (157)

### தமிழருக்கு

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுக்ளாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் சுக்ளாவை அவரது அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்துப் பேசிய திரு. இரா. அன்பரசு' ஈழத்தமிழர் துயர் துடைக்க மத்திய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை . எடுக்கவேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார்.

''இந்திய-இலங்கை உடன்படிக்கை அமுலாக்கம் மத்திய அரசின் தவறான போக்கினாலும், தமிழ்நாடு அரசின் பிழையான வழி காட்டலினாலும் தடைப்பட்டுள்ளது'' என்றும் அவர் இச்சந்திப்பின் போது மேலும் எடுத்துரைத்தார்.

# வடபகுதி லொறிகள் அனுராதபுரத்தில் சோதனை!

## வவுனியா முகாமில் சோதனைகள் நிறுத்தம்

(கே.வி.கே. திருலோகமூர்த்தி)

கொழும்பிலிருந்து வட பகுதிக்கு உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களுடன் வரும் சகல லொறிகளும் இனிமேல் அனுராதபுரத்தில் வைத்து பரிசோதனை செய்யப்படும். வவுனியாவில் எந்தவித சோதனைகளும் இடம்பெறாது.

கொழும்பிலிருந்து நேற்று திரும்பிய கிளிநொச்சி அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் இத்தகவலைத் தெரிவித்தார். சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் அரசாங்க அதிபர் வவுனியாவிலிருந்து கண்டி வீதியால் கிளிநொச்சிவந்தடைந்தார்.

இவர் கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கிளிநொச்சி அபிவிருத்தி, மற்றும் நிவாரண உதவி சம்பந்தமான பேச்சுக்களை நடத்திவிட்டு திரும்பியுள்ளார்.

உணவுப்பொருள், உரம் முதலானவற்றுடன் லொறி வாகனத் தொகுதி ஒன்றும் வவுனியா பிரதான வீதியூடாக கிளிநொச்சியை வந்து சேரும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (83)

## இன்று கூட்டம்

(வேலணை)

மாவட்ட விவசாய ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## ஜே. வி. பி. ஆலோசகர் மனைவியால் கொலை!

(கொழும்பு)

ஜே.வி.பி. இயக்கத்தலைவர் ரோகண விஜயவீரவின் அந்தரங்க ஆலோசகர் வைத்திய கலாநிதி ஆனந்த குலதுங்க பின்லாந்தில் அவரது மனைவியால் கொலைசெய்யப்பட்டுள்ளார். அவரது இரண்டாவது மனைவி ரீட்டா, இவரைக் கொலைசெய்து வீட்டுத்தோட்டத்தில் அவரது சடலத்தைப் புதைத்துவைத்துள்ளார். பின்லாந்து பத்திரிகைகள் இவர் இலங்கை வந்தபோது அரச படைகளால் கொலைசெய்யப்பட்டிருக்கலாமென செய்தி வெளியிட்டபோதும், அவரது முதல் மனைவியான ரஷ்ய பெண்மணியின் தகவலையடுத்து இன்டபோல் பொலிசார் விசாரணைகளை நடாத்தி உருக்குலைந்த சடலத்தை மீட்டனர். இவ்வழக்கில் எதிரியான ரீட்டாவுக்கு பின்லாந்து நீதிமன்றம் ஒன்பது ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. (எஸ்]

## வீரமரணம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி அதிகாலை 4 மணிக்கு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தொன்றில், விடுதலைப் புலிப்போராளி பூபதி (செல்லையா நடேசன், சந்தளாய்) வீரமரணமடைந்தார். (வி)

## உணவுடன் வந்த லொறிமீது இராணுவம் தாக்குதல்

(கிளிநொச்சி)

செஞ்சிலுவைச்சங்க உதவியுடன் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த லொறிகள் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டன.

கடந்தவாரம் கொழும்பிலிருந்து இருபது லொறிகளில் உணவுப்பொருள்கள் எடுத்து வரப்பட்டபோதே இவ்வாறு லொறிகள் தாக்கப்பட்டன.

இச்சம்பவத்தின்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் உடன் இருந்தனர்.

இத்தாக்குதல் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் தமது ஆட்சேபனையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர். (83)

### பத்து லட்சம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் பதினொரு லட்சம் மக்களில் மூன்று லட்சம் பேர் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். ஒன்றரை லட்சம் பேர் இந்தியாவில் அகதிகளாக உள்ளனர். ஒரு லட்சம் பேர் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழ்கிறார்கள். பத்து லட்சம் பேர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாக உள்ளனர்.

மிகுதிப் பேரே வழமையான வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த மதிப்பீடு தெரிவிக்கிறது. (எஸ்-ரி)

### 100 லொறிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோன்று தினமும் உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் நோக்கி பூநகரி ஊடாக லொறிகள் வந்தவண்ணமிருக்கின்றன.

வவுனியா இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பல லொறிகள் கொழும்பு நோக்கிச் செல்வதற்கும் இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (23)

## காசோலைகள் ஏற்கப்படுகிறது

(ஊர்காவற்றுறை)

யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இம்மாதம் முதலாந் திகதியிலிருந்து காப்புறுதிப்பத்திரதாரரின் காசோலைகள் மட்டும் ஏற்கப்பட்டு வருகின்றன.

கடந்த டிசம்பர் மாதம் 12ந் திகதி முதல் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரை இயங்கி வருகின்றது.

# தமிழர் காலடி வைத்தால் சுட்டுக் கொல்லப்படுவார்கள்

## ஏறுவூரில் ஊர்காவல் படை எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

''ஏறுவூரில் தமிழர்கள் காலடி வைத்தால் சுட்டுக் கொல்லப்படுவார்கள்'' என முஸ்லிம் ஊர்காவல்படை விரட்டி வருவதால் ஐயாயிரம் தமிழ்குடும்பங்கள் தமது தமது சொந்த வீடுகளுக்கு செல்ல அஞ்சி முகாம்களிலும் வேறு உறவினர்களுடனும் வாழ்ந்துவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகவல்களை மட்டக்களப்பில் இருந்துவந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவிகள் ''ஈழநாடு'' வுக்குத் தெரிவித்தனர்.

''கிழக்குப் பல்கலைக்கழகம் நடைபெறுவதாக அரசாங்கச் செய்திநிறுவனங்கள் தெரிவித்தாலும், பெருந்தொகையான மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்வதில்லை. பல கல்லூரிகளிலும் உயர்வகுப்பு மாணவர்கள் ஊர்காவற் படையின் அச்சுறுத்தல் காரணமாகவும், கெடுபிடிகாரணமாகவும் பாடசாலைகள் செல்வதில்லை. மாணவியாக இருந்தால் ''சுதந்திரப் பறவையா நீ' என பாலியல் கொடுரங்களும் 'புலி தானடா நீ' எனத் தமிழ்க் குழுக்களும், முஸ்லிம் ஊர்காவற் படையும் துன்பம் விளைவிப்பதாக அவர்கள் கூறினார்கள்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஆயுதங்களுடன் நடமாடும் தமிழ்க் குழுக்கள், இரவு வேளைகளில் பணம் படைத்தவர்களை மிரட்டி ''நாங்கள் புலிகள்; எங்களுக்குப் பணம், நகை வேண்டும்'' என மிரட்டுவதால் எவரும் நிம்மதியாக வாழமுடிவதில்லை எனவும் அவர் சொன்னார்.

பெரும்பாலான பாடசாலைகளில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் இப்பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க பிரஜைகள் குழு முயற்சி எடுத்தாலும் ''புலிகள் இருக்கும்வரை நாங்கள் போக மாட்டோம்'' என இராணுவம் பாடசாலையைவிட்டு வெளியேற மறுப்பதால் கல்வி முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. (எஸ்)

### அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்ந்ததாலும் எழுபத்தொரு கோடி ரூபா மேலதிகமாக செலவு ஏற்பட்டிருப்பதாக அரசாங்க கணக்காய்வு அறிக்கை தகவல்வெளியிட்டுள்ளது, இவ்வறிக்கையை பாராளுமன்றத்தில் அரசாங்க கணக்காய்வு பிரதிமா அதிபர் காமினி எப்பா சமர்ப்பித்தார். (எஸ்)

### வாழ்க்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெற்றது.

திரு. ராஜன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: ''யுத்த நிறுத்தத்தை சிறிலங்கா அரசு மீறிவருகின்றது. ஆனால் நாம் மனப்பூர்வமாக இந்த நிமிடம் வரை யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடித்து வருகிறோம்'' என்றார்.

நேற்று கோப்பாயில் நடைபெற்ற கப்டன் அமலனின் இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

யாழ். மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், மகளிர் முன்னணி மாலினி, நிசாந்தினி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

இராணுவ மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் மயானத்தில் அமலனின் புகழுடம்பு தகனம் செய்யப்பட்டது. (153-வி]

## லயன்ஸ் கழக இலவச வைத்திய சேவை

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணியில் உள்ள லயன்ஸ் கழக மண்டபத்தில் பொதுமக்களின் நன்மை கருதி இலவசவைத்தியசேவை நிலையம் ஒன்று நடாத்தப்பட்டு வருகிறது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரே இந்த இலவச வைத்தியசேவை நிலையத்தினை பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் நடத்தி வருகின்றனர். (139)

## 35 புளொட் உறுப்பினர் மாலைதீவு சிறைகளில்

(மாலே)

மாலைதீவில் சதிப்புரட்சியில் ஈடுபட்டு கைதான 68 புளொட் உறுப்பினர்களில் 35 பேர் மாலைதீவில் தொடர்ந்தும் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

33 பேர் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மாலைதீவில் சிறைவைக்கப்பட்டுள்ளவர்களில்12 பேருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் குறித்து இலங்கை மாலைதீவுடன் தொடர்பு கொண்ட போதிலும் இந்த 35 பேரையும் இலங்கையிடம் ஒப்படைக்க அந்நாட்டு அரசு மறுத்து விட்டது. (கி)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## மரண அறிவித்தல்

### சி. சோமசுந்தரம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வதிரியை வசிப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் குருநாகல் 'சோமாஸ்' வர்த்தக நிலையத்தின் உரிமையாளருமாகிய சி. சோமசுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார். இறுதிக் கிரியைகள் 7-1-91 (இன்று )திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

சோ. கோகுலதாசன் (மகன்)
(அபிவிருத்தி உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச்சபை)

ஸ்ரீ கணேசவாசம், வதிரி.